## உருப்படிகள் தவணை 2

1) மிஸ்ர அலாரிப்பின் தாளம், இராகம் யாது?
   ✍மிஸ்ர சாபு, நாட்டை
2) மிஸ்ர நடையின் சொற்கட்டு யாது?
   ✍தகிட தகதிமி
3) அலாரிப்பின் இரு பகுதிகள் யாது?
   ✍பூர்வாங்கம் (முற்பகுதி), உத்தராங்கம் (பிற்பகுதி)
4) மிஸ்ர இலாரிப்பு எவ்வகையான உருப்படி?
   ✍நிருத்த உருப்படி
5) கணபதி கௌத்துவத்தில் கூறும் கடவுள், தாளம், இராகம், இயற்றியவர் பெயர், நடன அமைப்பு செய்தவர் யார்?
   ✍கடவுள் - கணபதி
   ✍தாளம் - சதுஸ்ர ஏகம்
   ✍இராகம் - நாட்டை
   ✍இயற்றியவர் - கங்கைமுத்து நட்டுவனார்
   ✍நடன அமைப்பு - பத்மஸ்ரீ அடையாறு K.லக்ஷ்மணன்
6) சுப்பிரமணிய கௌத்துவத்தில் கூறும் கடவுள், தாளம், இராகம், இயற்றியவர் பெயர், நடன அமைப்பு செய்தவர் யார்?
   ✍கடவுள் - முருகன்
   ✍தாளம் - சர்வலகு
   ✍இராகம் - கௌளை
   ✍இயற்றியவர் - கங்கைமுத்து நட்டுவனார்
   ✍நடன அமைப்பு - திருமதி.சாந்தினி சிவநேசன்
7) கீர்த்தனை எவ்வகை உருப்படி?
   ✍நிருத்திய உருப்படி
8) "விளையாட இது நேரமா..." என்ற கீர்த்தனையின்
   ✍இராகம் - ஷண்முகப்பிரியா
   ✍தாளம் - ஆதி
   ✍சாகித்திய கர்த்தா - உழுந்தூர் பேட்டை கிருஷ்ணர்
   ✍நாட்டிய அமைப்பு - திருமதி.லீலாம்பிகை செல்வராசா
8) "திருப்பரங்குன்ற வேலா..." என்ற கீர்த்தனையின்
   ✍இராகம் - ஹிந்தோளம்
   ✍தாளம் - ஆதி
   ✍சாகித்திய கர்த்தா - பாபநாசம் சிவன்
   ✍நாட்டிய அமைப்பு - பத்மஸ்ரீ அடையாறு K.லக்ஷ்மணன்

## 72 மேளகர்த்தா

1) இராகங்களின் இரு வகைகள் எவை?
   ✍ஜனக இராகம், ஜன்னிய இராகம்
2) ஜனக இராகத்தின் மறுபெயர் யாது?
   ✍மேளகர்த்தா இராகம், சம்பூர்ண இராகம், மேள இராகம், இராகாங்க இராகம், சம்பூர்ண இராகம்
3) 72 மேளகர்த்தா அமைப்பைக் கூறியவர் யார்?
   ✍வேங்கடமகி
4) 18ம் நூற்றாண்டில் 72 மேளகர்த்தா பற்றி கூறிய மன்னர் யார்?
   ✍துளஜா மகாராஜா
   ✍சங்கீத சாராம்ருதம் எனும் நூலில்
5) கோவிந்தாச்சாரியார் எந்த நூலில் **கனகாங்கி, ரத்னாங்கி** எனத் தொடங்கும் 72 மேளகர்த்தா பட்டியலை குறிப்பிட்டுள்ளார்?
   ✍சங்கிரக சூடாமணி
6) **கனகாம்பரி, பேனத்யுதி** எனத் தொடங்கும் அசம்பூர்ண மேளபத்ததியினை பயன்படுத்தியவர் யார்?
   ✍முத்துஸ்வாமி தீட்சிதர்
7) **கனகாங்கி, ரத்னாங்கி** எனத் தொடங்கும் மேளகர்த்தா பட்டியலை எவ்வாறழைப்பார்?
   ✍சம்பூர்ண மேளபத்ததி
8) 12 சக்கரங்களும் எவை?
   ✍இந்து, நேத்ர, அக்கினி, வேத, பாண, ருது, ரிஷி, வஸு, பிரம்ம, திசி, ருத்ர, ஆதித்ய

9) 72 மேளகர்த்தாக்களின் இரு பிரிவுகள் எவை?
- உத்தராங்க மேளகர்த்தாக்கள், பூர்வாங்க மேளகர்த்தாக்கள்

10) பூர்வாங்க மேளகர்த்தாக்களில் உள்ள சக்கரங்கள் எத்தனை?
- 6 சக்கரங்கள்

11) உத்தராங்க மேளகர்த்தாக்களில் உள்ள சக்கரங்கள் எத்தனை?
- 6 சக்கரங்கள்

12) சக்கரத்திற்கு சக்கரம் மாறும் ஸ்வரங்கள் எவை?
- ரிஷபம், காந்தாரம்

13) இராகத்திற்கு இராகம் மாறும் ஸ்வரங்கள் எவை?
- தைவதம், நிஷாதம்

14) பூர்வாங்க ,உத்தராங்க மேளகர்த்தாக்களுக்கிடையில் மாறும் ஸ்வரம் எது?
- மத்திமம்

15) இந்து சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- கனகாங்கி
- ரத்னாங்கி
- கானமூர்த்தி
- வனஸ்பதி
- மானவதி
- தானரூபி

16) நேத்ர சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- ஸேனாவதி
- ஹனுமதோடி
- தேனுக
- நாடகப்பிரியா
- கோகிலப்பிரியா
- ரூபவதி

17) அக்கினி சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- காயகப்பிரியா
- வகுளாபரணம்
- மாயாமாளவகௌளை
- சக்கரவாகம்
- ஸூர்யகாந்தம்
- ஹடகாம்பரி

18) வேத சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- ஐங்காரத்வனி
- நடபைரவி
- கீரவாணி
- கரஹரப்பிரியா
- கௌரி மனோஹரி
- வருணப்பிரியா

19) பாண சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- மாரரஞ்ஜனி
- சாருகேசி
- ஸரஸாங்கி
- ஹரிகாம்போதி
- தீரசங்கராபரணம்
- நாகநந்தினி

20) ருது சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- யாகப்பிரியா
- ராகவர்த்தனி
- காங்கேயபூஷணி
- வாகதீச்வரி
- சூலினி
- சலநாட

21) ரிஷி சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- ஸாலகம்
- ஜலார்ணவம்
- ஜாலவராளி
- நவனீதம்
- பாவனி
- ரகுப்பிரியா

22) வஸூ சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- கவாம்போதி
- பவப்பிரியா
- சுபபந்துவராளி
- ஷட்விதமார்க்கிணி
- ஸூவர்ணாங்கி
- திவ்யமணி

23) பிரம்ம சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- தவளாம்பரி
- நாமநாராயணி
- காமவர்த்தனி
- ராமப்பிரியா
- கமனச்ரம
- விச்வம்பரி

24) திசி சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- சியாமளாங்கி
- சண்முகப்பிரியா
- ஸிம்ஹேந்திரமத்திமம்
- ஹேமவதி
- தர்மவதி
- நீதிமதி

25) ருத்ர சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?
- காந்தாமணி
- ரிஷபப்பிரியா
- லதாங்கி
- வாசஸ்பதி
- மேஷகல்யாணி
- சித்ராம்பரி

26) ஆதித்ய சக்கரத்தில் உள்ள இராகங்கள் எவை?

✍ஸுசரித்ர ✍ஜோதி ஸ்வரூபிணி
✍தாதுவர்த்தினி ✍நாஸிகாபூஷணி
✍கோஸலம் ✍ரஸிகப்பிரியா

## கனம்.ஈ.கிருஷ்ணய்யர்

1) பரதநாட்டிய மறுமலர்ச்சியின் தந்தை யார்?
✍கனம்.ஈ.கிருஷ்ணய்யர்

2) கிருஷ்ணய்யருடைய தாய், தந்தை யார்?
✍தாய் - அனந்தலட்சுமி அம்மா
✍தந்தை - கைலாசநாத ஐயர்

3) இவர் பிறந்த ஆண்டு எது?
✍1897 ஆகஸ்ட் 6ம் திகதி

4) இவர் யாருடைய சுவீகரப்பிள்ளையாக வளர்ந்தார்?
✍கல்லிடைக் குறிச்சி ஈஸ்வர ஐயர்
✍மீனாட்சி அம்மாள் தம்பதி

5) சட்டக்கல்லூரிவிடுதிச்சாலையில் தங்கியிருந்து பயிலும் போது நடித்த நாடகம் எது? வேடம் எது?
✍நாடகம் - சாரங்கதாரா
✍வேடம் - ரத்னாங்கி

6) இவர் தமிழ் நாடக அரங்கின் சிற்பியென கருதப்படும் ப.சம்பந்தமுதலியாரின் பாராட்டு பெற்ற நாடகங்கள் எவை?
✍மிருச்ச கடிகம் நாடகத்தில் வசந்தசேனாவாகவும்
✍இரத்னாவலி நாடகத்தில் தத்தாவாகவும்

7) பெண் வேடம் தரித்த முதலாவது ஆண் நடனக் கலைஞர் யார்?
✍கனம்.ஈ.கிருஷ்ணய்யர்

8) இவர் யாரிடம் நடனம் பயின்றார்?
✍மதுராந்தகம் ஜெகதாம்பாள்

9) கனம்.ஈ.கிருஷ்ணய்யர் இலங்கையில் சொற்பொழிவு ஆற்றிய இடம் எது?
✍ஆரிய திராவிட பாஷா விருத்தி சங்க ஆதரவில் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடன் எனும் பொருள் பற்றி

10) எத்தனையாம் ஆண்டு எந்த விழாவிற்கு தலைமை தாங்கி இவர் இலங்கை வந்தார்?
✍1950ம் ஆண்டு கார்த்திகை மாதம்
✍கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை நடன விழா

11) கனம்.ஈ.கிருஷ்ணய்யர் இறந்த ஆண்டு எது?
✍1968ம் ஆண்டு

## பந்தனை நல்லூர் சபாரஞ்சிதம்

1) பந்தனை நல்லூர் சபாரஞ்சிதம் பிறந்த ஆண்டு எது?
✍23.06.1916

2) இவருடைய தாய் யார்?
✍கோலாட்டத்தில் தலை சிறந்து விளங்கிய நாகாம்புஜம்

3) இவருடைய நடன குரு யார்?
✍மீனாட்சி சுந்தரம்பிள்ளை

4) சபாரஞ்சிதம் அவர்களின் அரங்கேற்றம் நடந்த இடம் எது?
✍1925ம் வருடம் மாசி மாதம் பந்தனை நல்லூர் பசுபதீஸ்வரர் கோயிலில்

5) தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் இவர் ஏற்று நடித்த பாத்திரம் எது?
✍ராஜமோகினி என்ற பாத்திரம்

6) இவர் மறைந்த ஆண்டு எது?
✍19.10.2000

# ஸ்ரீமதி ருக்மணி தேவி அருண்டேல்

1) ருக்மணிதேவி அருண்டேல் பிறந்த ஆண்டு?
- ✍1904 மாசி மாதம் 29ம் திகதி

2) இவருடைய தாய், தந்தை யார்?
- ✍தாய் - ஷேஷம்மாள்
- ✍தந்தை - நீலகண்ட சாஸ்திரி

3) இவருடைய இளம் வயதில் உள்ளத்தில் நாட்டுப்பற்றையும் கலாசாரப்பற்றையும் ஊன்றி வளரச் செய்தவர் யார்?
- ✍டாக்டர் அன்னி பெஸண்ட்

4) ருக்மணிதேவி பலே நடனம் யாரிடம் கற்றார்?
- ✍கிளியோ நோர்டியிடம்

5) இவரை இந்திய நடனம் கற்குமாறு திசை திருப்பியவர் யார்?
- ✍அன்னாபவ்லோவ்

6) இவர் நடனம் கற்ற முதல் குரு யார்?
- ✍மைலாப்பூர் கௌரி அம்மாள்

7) ருக்மணிதேவி முதலாவது பாடமாக எதனைக் கற்றார்?
- ✍ஸரஸி ஜாஷுலு என்ற சப்தத்தை

8) பரதநாட்டியத்தை முறைப்படி யாரிடம் கற்றார்?
- ✍மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம்

9) இவரது பரத நாட்டிய அரங்கேற்றம் எங்கே எப்போது நடைபெற்றது?
- ✍1935ம் ஆண்டு மார்கழி மாதம் அடையாற்றில் உள்ள பழைய ஆலமரத்தின் கீழ்

10) நாட்டியத்தை சதிர் என்று அழைத்த பெயரை மாற்றி பரதநாட்டியம் என அழைத்தவர் யார்?
- ✍ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல்

11) இவரது முதலாவது பரதநாட்டியக் கச்சேரி எங்கு நடைபெற்றது?
- ✍எழும்பூர் மியூசியம் தியேட்டரில்

12) இவரால் தோற்றுவிக்கப்பட்ட கலைக்கூடம் எது?
- ✍சர்வதேச கலைக் கழகம்

13) பின்னர் எப்பெயரால் இக்கழகம் அழைக்கப்பட்டது?
- ✍கலாஷேத்திரா

14) கலாஷேத்திரத்தின் முதலாவது கூட்டம் எப்போது நடைபெற்றது?
- ✍1936ம் ஆண்டு தைத்திங்கள் 6ம் திகதி

15) கலாஷேத்திரத்தின் தலையாய இரு நோக்கங்கள் எவை?
- ✍உண்மையான கலைகள் யாவற்றினதும் இன்றியமையாத ஒற்றுமை
- ✍தனிமனித, தேசிய, சமய, சர்வதேச வளர்ச்சியில் இயல்பாக கலை செயற்படுதலை எடுத்துக்காட்டி அங்கீகரித்தல்

16) 1986ம் ஆண்டு தை மாதம் யாரால் கலாஷேத்திராவின் பொன்விழா தொடக்கி வைக்கப்பட்டது?
- ✍பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியினால்

17) ருக்மணிதேவி அருண்டேல் குழந்தைகளின் கல்விக்காக ஸ்தாபித்த கலைக்கூடங்கள் எவை?
- ✍1934ம் ஆண்டில் பெஸன்ட் தியோஸோபிக்கல் ஹைஸ்கூல்
- ✍மொண்டிசேரி பள்ளிக்கூடம்
- ✍ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை

18) ருக்மணிதேவி தனது வாழ்க்கையை எவ்வாறு வாழ்ந்து காட்டினார்?
- ✍அஹிம்சா தர்மத்தில்

19) ருக்மணிதேவி அம்மையாருக்கு கிடைத்த பட்டங்கள் எவை?
- ✍1956 -இந்திய அரசாங்கம் வழங்கிய **"பத்மபூஷண்"** விருது
- ✍1957 -சங்கீத நாடக அகாடமி வழங்கிய **"முன்னனி நாட்டியமணி"**
- ✍1960 -அமெரிக்கப் பல்கலைக்கழகம் (Humanities - Wayne state University of U.S.A) வழங்கிய **"டாக்டர்"** பட்டம்
- ✍1968 -பிராணிகள் நலன்பேணும் சபை **"பிராணி மித்ரா"** பட்டம்

✍1968 - **"Fellowship of the Sangeet Nataka Academy"** விருது

✍1969 -ரவீந்திரநாத் பல்கலைக்கழகம் வழங்கிய **"கௌரவ கலாநிதி"** பட்டம்

✍1972 -சாந்தி நிகேதன் விஷ்வபாரதி பல்கலைக்கழகம் வழங்கிய **"தேசிய கோதமா"** விருது

✍1977 -மகாராஷ்டிரத்தை சேர்ந்த Fuel Instrument Engineers வழங்கிய **"கலையுலகில் சாதனை விருது"**

20) "அத்தை" என அன்புடன் அழைக்கப்படும் வாக்கேயகாரர் யார்?

✍ருக்மணிதேவி அம்மையார்

21) இவர் இறைவனடி சேர்ந்த ஆண்டு எது?

✍1986ம் ஆண்டு மாசி மாதம் 24ம் திகதி

## தஞ்சாவூர் சுப்பராய நட்டுவனார்

1) அரண்மனை நாட்டிய ஆசானாகவும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் பணிக்குமாக நியமித்த வாக்கேயகாரர் யார்?

✍தஞ்சாவூர் சுப்பராய நட்டுவனார்

2) துறவு பூண்டு சிதம்பர நாதயோகி என்ற பெயரோடு தென்னகத்தில் கோயில்களுக்கு சென்று காசிக்குப் போன வாக்கேயகாரர் யார்?

✍தஞ்சாவூர் சுப்பராய நட்டுவனார்

3) சுப்பராய நட்டுவனாரின் குமாரர்கள் யார்?

✍பொன்னையா ✍சின்னையா

✍சிவானந்தம் ✍வடிவேலு

## மைலாப்பூர் கௌரி அம்மாள்

1) மைலாப்பூர் கௌரி அம்மாள் எத்தனையாம் ஆண்டு யாருடைய மகளாகப் பிறந்தார்?

✍1892ம் ஆண்டு

✍மைலாப்பூர் துரைக்கண்ணம்மாளின் மகள்

2) இவர் யாரிடம் நாட்டியப்பயிற்சி பெற்றார்?

✍தஞ்சாவூர் கிருஷ்ண நட்டுவனாரின் குமாரரான நெல்லூர் முனுஸ்வரி நட்டுவனாரிடம்

3) கௌரி அம்மாள் நிகழ்த்திய நாடகம் எப்போது பாராட்டப்பட்டது?

✍3.1.1932 சென்னை சங்கீத வித்துவ சபையில்

4) இவருடைய கடைசி நாட்டிய நிகழ்ச்சி எப்போது நடைபெற்றது?

✍1935ம் ஆண்டு அந்திய காங்கிரஸின் வெள்ளிவிழா மாநாட்டையொட்டி ஏற்பாடான பொருட்காட்சியில்

5) மைலைக் கபாலீஸ்வரர் கோயிலின் கடைசித் தேவதாசி யார்?

✍மைலாப்பூர் கௌரி அம்மாள்

6) கௌரி அம்மாள் இறந்த ஆண்டு எது?

✍21.01.1971 அன்று

## மதுராந்தகம் ஜகதாம்பாள் அம்மா

1) மதுராந்தகம் ஜகதாம்பாள் பிறந்த இடம் எது?

✍மதுராந்தகத்திற்கு அருகே கடப்பேரி எனும் ஊரில்

2) இவருடைய தாயார் பெயர் யாது?

✍நீலாம்பாள்

3) இவர் பிறந்த ஆண்டு எது?

✍24.08.1873

4) இவருடைய தாயார் தொண்டு செய்த ஆலயம்?

✍சுவேதாரண்யேஸ்வரர் என்ற சிவன் கோயிலில் திருமுறைத் தொண்டு

5) இவர் தனது தாயாரின் முயற்சியால் நாட்டியம் பயின்ற குரு யார்?

✍ராமண்ணா, குப்பண்ணா சகோதரர்கள்

6) அந்தக் கரிச்சான் குஞ்சு ஆடி யார் பார்ப்பது என்று கூறி வேண்டா வெறுப்பாக நட்டுவனாரால் நடனம் கற்பிக்கப்பட்ட வாக்கேயகாரர் யார்?

✍மதுராந்தகம் ஜகதாம்பாள்

7) ஆசிரியர்களின் கடுமையான சொல் அம்புகள் மத்தியில் இவர் எதுவரை கற்றுக்கொண்டார்?
✍ஜதீஸ்வரம் என்ற உருப்படி வரையில்

8) இவர் ஜதீஸ்வரம் ஆடிய திறமையை கண்டு தம்முடன் அழைத்து கலையின் உன்னத ஸ்தானத்தை அடைய செய்த நட்டுவனார்கள் யார்?
✍வழுவூர் வித்துவான் சாமிப்பிள்ளை
✍தஞ்சாவூர் குப்புசாமி நட்டுவனார்

9) இரு நட்டுவனாரிடமும் எத்தனை மார்க்கங்கள் முறையாகப் பயின்றார்?
✍04

10) கற்பூரம் போன்ற திறமை பெற்ற ஜகதாம்பாள் எப்படி அரங்கேற்றம் செய்தார்?
✍சொந்த ஊரில் உள்ள சிவன் கோவிலில் ராமண்ணா சகோதரர்கள் நாணி தலைகுனியும் படி அரங்கேற்றினார்

11) இவ்வளவு கறுப்பாக தோன்றும் இவர் ஆடினால் நன்றாக இருக்குமா என ஐயங்கொண்டவர் மத்தியில் தேவதை ஒன்று இறங்கி வந்து நடனம் புரிவதாக கூறுமளவு செயற்பட்ட வாக்கேயகாரர் யார்?
✍மதுராந்தகம் ஜகதாம்பாள்

12) ஜகதாம்பாளின் வாழ்க்கை துணைவரின் பெயர் யாது?
✍செட்டியார்

13) இவர் இறந்த ஆண்டு எது?
✍13.09.1943

## ஸ்ரீமதி பாலசரஸ்வதி

1) அபிநய அரசி என அழைக்கப்படும் மரபுவழி இசைக்கலைஞர் யார்?
✍ஸ்ரீமதி பாலசரஸ்வதி

2) இவர் பிறந்த ஆண்டு எது?
✍1918 வைகாசி மாதம்

3) இவருடைய தாய், தந்தை யார்?
✍தாய் - ஜெயம்மாள்
✍தந்தை - கோவிந்தராஜா

4) பாலசரஸ்வதியின் பரதநாட்டிய குருவாக விளங்கியவர் யார்?
✍மயிலாப்பூர் கௌரி அம்மாள்

5) இவரது அரங்கேற்றம் எத்தனை வயதில் எங்கு நடைபெற்றது?
✍ஏழு வயதில்
✍காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலில்

6) ஹஸ்தாபிநயங்கள் உதவியின்றி ஒரு பாடலின் கருத்தை கண்களாலும், முகபாவத்தாலும், பிரதிபலிக்கும் ஆற்றலுடையவர் யார்?
✍ஸ்ரீமதி பாலசரஸ்வதி

7) இவர் எத்தனையாம் ஆண்டு நாட்டியக் கல்லூரி நிறுவினார்?
✍1953

8) எத்தனையாம் ஆண்டு, எந்த மலரில் நாட்டிய நினைவு என்ற கட்டுரை எழுதியுள்ளார்?
✍1955ம் ஆண்டு வெளிவந்த
✍கல்கி தீபாவளி மலரில்

9) இவர் தலைவராக தெரிவு செய்யப்பட்ட சபை?
✍சென்னை சங்கீத வித்துவ சபை

10) நாட்டிய செயன்முறை நுணுக்கங்கள் என்ற பரதநாட்டிய நூலை யாருடன் இணைந்து எத்தனையாம் ஆண்டு வெளியிட்டார்?
✍1959ம் ஆண்டு
✍பேராசிரியர்.ஷ.இராகவனுடன்

11) இவர் பெறற் பட்டங்கள் எவை?
✍1977ம் ஆண்டு இந்திய அரசினால் **பத்மபூஷண்** விருது
✍1973ம் ஆண்டு சென்னை சங்கீத வித்துவ சபை வழங்கிய **சங்கீத கலாநிதி** பட்டம்

12) அன்புடன் பாலா என்று அழைக்கப்படும் வாக்கேயகாரர் யார்?
✍ஸ்ரீமதி பாலசரஸ்வதி

13) 1977ல் பரதநாட்டியம் பற்றிய திரைப்படத்திற்கு எந்த இயக்குநருக்கு இவர் உதவி செய்தார்?
✍திரு.சத்யஜித்ராய்

14) பாலசரஸ்வதி பற்றி ஜி.வெங்கடாசலம் எந்த நூலில் எழுதியுள்ளார்?
✍Dance In India

15) இவர் இறைவனடி சேர்ந்த ஆண்டு எது?
✍09.02.1984

## அருணாசல நட்டுவனார்

1) அருணாசல நட்டுவனார் எத்தனையாம் ஆண்டு யாருடைய மகனாகப் பிறந்தார்?
✍1873ம் ஆண்டு
✍குமாரஸ்வாமி நட்டுவனாருக்கு

2) தீர்மானங்களை கணித நுட்பங்கள் செறிந்த லய வேலைப்பாடுகளுடன் தயாரித்த வாக்கேயகாரர் யார்?
✍அருணாசல நட்டுவனார்

3) அருணாசல நட்டுவனார் இயற்றிய இரு நூல்கள் எவை?
✍ஸங்கீதகாயகாம்ருத வர்ஷினி
✍ஸங்கீத சுரபூஷனி

4) இவர் இறந்த ஆண்டு எது?
✍12.06.1993

# அபிநயஅரசி ஸ்ரீமதி பாலசரஸ்வதி

- அபிநய அரசி என அழைக்கப்படுவர்.
- மரபுவழி இசை நடன கலைஞர் குடும்பத்தில் பிறந்தார்.
- 1918ம் ஆண்டு மே மாதம் கோவிந்தராஜாவிற்கும், ஜெயம்மாளுக்கும் மகளாக பிறந்தார்.
- 20ம் நூற்றாண்டில் புகழ் பூத்த நடனக்கலைஞர்.
- கலைஞானம் குழந்தைப் பராயம் கொண்டே காணப்பட்டது.
- சங்கீதம், நடனம் ஆகிய கலைகள் கற்றார்.
- நாட்டியப் பாடல்கள், இசைப்பாடல்கள் சேஷத்ரக்சர் பதங்கள், ஜாவாளிகள் என்பன குடும்பச் சொத்து.
- வீணை தனம்மாள் இவரது பாட்டி
- பாட்டியின் பாட்டியான காமாட்சி அம்மாள் தஞ்சை அரசசபைக்கு நர்த்தகி, பாடகி ஆவார்.
- பாலசரஸ்வதியின் நாட்டியப்பணிக்கு வித்திட்டவர் தாயார்.
- தந்தை இசைக்கலைஞர், மகளின் நாட்டியக்கச்சேரிக்கு பாடகராக இருந்தார்.
- பாலசரஸ்வதி இசையில் வல்லவர்.
- இவரின் பரதநாட்டிய குரு மயிலாப்பூர் கௌரியம்பாள்.
- பின் நெல்லை நட்டுவனாரின் மகனான கந்தப்பா நட்டுவனாரிடம் பரதம் முறைப்படி கற்றார்.
- பதநாட்டிய அரங்கேற்றம் 7 வயதில் காஞ்சி காமாட்சி கோவிலில் நடைபெற்றது.
- அரங்கேற்றத்தின் பின் எல்லப்பா நட்டுவனாரிடமும் கந்தப்பாவின் மகன் கணேசனிடமும் பரதக்கலை கற்றார்.
- பதங்கள், வர்ணங்கள் உருப்படிகளுக்கு கற்பனையாக அபிநயம் செய்வதை திரு.சின்னையா நாயுடு, குச்சுப்புடி வேதாந்தம் லக்சுமி நாராயண ஸாஸ்திரியிடம் கற்றார்.
- 20ம் நூற்றாண்டில் பிரசித்தி வாய்ந்த பரதநாட்டிய அவைக்காற்று கலைஞராவார்.
- ஹஸ்தாபிநயங்கள் உதவியின்றி பாடலின் கருத்தை கண்களாலும் முகபாவத்தாலும் பிரதிபலிக்கும் ஆற்றல் படைத்தவர்.
- இசைஞானம் நாட்டியம் சிறப்படைய உதவியது.
- தனக்கேயான நாட்டிய பாணியான பாலசரஸ்வதி பாணி உருவாக்கினார்.
- நாட்டியம் மதிப்பு குறைந்த காலத்தில் மேடைகளில் ஆடி பழைய மதிப்புப்பெற பாடுபட்ட கலைஞர்.
- தமிழகம், இந்தியாவின் இதர மாநிலம், வெளிநாடுகளிலும் நாட்டியக் கச்சேரி செய்து, பரதக்கலை பற்றிய பேச்சுக்கள் நடாத்தி, கட்டுரைகள், நூல்கள் எழுதிப்பிரபல்யப் படுத்தினார்.
- **1953**ம் ஆண்டு நாட்டியக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்து செவ்வனே நடாத்தி வந்தார்.
- இலங்கையில் இருந்து செல்வி.சியாமளா நடராஜாவும், செல்வி.கனகேஸ்வரி சங்கரப்பிள்ளையும் இக்கல்லூரியில் பயின்றார்கள்.
- 1955ம் ஆண்டு கல்கி தீபாவளி மலரிலே இத்துறையில் தான் பெற்ற அனுபவங்கள் பற்றிய நாட்டிய நினைவுகள் என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார்.

- இவருடைய நேர்காணல் இலஸ்றேற்டட், வீக்லி மார்க் ஆங்கில சஞ்சிகைகளில் வெளிவந்தன.
- சென்னை வித்துவ சபையில் 47ம் ஆண்டு நிறைவு விழாவிற்கு தலைவராக நியமிக்கப்பட்டார்.
- **<u>1959</u>** இல் தமிழ்மொழியில் நாட்டிய நூல் ஒன்றை பேராசிரியர் இராகவனுடன் இணைந்து எழுதினார்.
- இன்நூலில் நாட்டிய செயன்முறை நுணுக்கம் உள்ளது.
- நாட்டிய விளக்கப்படங்களுடன் பரதநாட்டியம் என்ற பெயரில் உள்ளது.
- 1961 ம் ஆண்டு வெளிநாடுகளிலும் இக்கலையைப் பரப்புவதற்கு வழிமுறைகளை கடைப்பிடித்தார்.
- ~~முதலில் டோக்கியோ~~
- 1962 இல் ஐக்கிய அமெரிக்கா
- 1963 இல் இங்கிலாந்து சென்று பரதக்கலையை வெளிப்படுத்தினார்.
- கனடாவில் இக்கலையை பாலசரஸ்வதியின் மாணவர்களான திருமதி.லூயிகிறப்ஸ்சும், பிரியம் வதாவும் கற்பித்தார்கள்.
- இவரது கலை வளர்ச்சிக்கு உதவியாக இருப்பவர்கள் பிரபல வழக்கறிஞர் ஈ.கிருஷ்ணயர், சென்னை சங்கீத சபையின் சமஸ்கிருத பேராசிரியர் வி.ராகவன்
- ஜலதரங்க புகழ் ரமணையாச் செட்டியார் உதவியால் சென்னை சங்கீத வித்துவசபை நிகழ்ச்சியில் **<u>1933</u>** தொடக்கம் சிறப்பித்து வந்தார்.
- **<u>1977</u>** இல் இந்திய அரசாங்கம் **<u>பத்மபூஷண்</u>** பட்டம் வழங்கியது.
- **<u>1973</u>** இல் சென்னை சங்கீத வித்துவ சபை சங்கீத கலாநிதி பட்டத்தை வழங்கியது.
- நண்பர்கள் "பாலா" என அன்பாக அழைப்பர்.
- இவரைப் பற்றி ஜி.வெங்கடாசலம் "Dance in India" எனும் நூலில் விபரமாக எழுதி உள்ளார்.
- **<u>1977</u>** இல் பரதநாட்டியம் பற்றிய திரைப்படம் திரு.சத்யஜித்ராய் தயாரித்த போது அவருக்கு உதவினார்.
- 09.02.1984 இல் உலக வாழ்வினை நீத்தார்.

# மயிலாப்பூர் கௌரியம்பாள்

- மைலாப்பூர் துரை கண்ணம்மாவின் 4 வது மகள்.
- 1892இல் பிறந்தார்.
- தாயின் நாட்டிய ஆசானான தஞ்சாவூர் கிருஷ்ண நட்டுவனாரின் குமாரரான நெல்லூர் முனுஸ்சுவாமி நட்டுவனாரிடம் நாட்டியம் பயின்றார்.
- பதங்கள் பாடுவதில் திறமையான பொன்னுஸ்வாமியிடம் பதங்கள் பாடக் கற்றார்.
- நிருத்தத்தைக் காட்டிலும் அவருடைய திறமை அபிநயத்தில் பளிச்சிட்டது.
- சிறப்பான அபிநய அழகினால் காண்போரைக் கவரும் வன்மை பெற்றிருந்தார்.
- ஆலயச் சேவை மட்டுமன்றி பல்வேறு அரங்குகளில் கௌரியின் நடன நிகழ்ச்சிகள் நடந்தது.
- முன்னுசுவாமி நட்டுவனார் மறைந்த பின் அவருடைய குமாரர் கந்தப்ப நட்டுவனார் இவருக்கு நட்டுவாங்கம் செய்தார்.
- 03.01.1932 அன்று சென்னை சங்கீத வித்துவ சபையில் கௌரியம்பாளின் நாட்டியம் எல்லோராலும் பாராட்டப்பட்டது.
- ஆந்திர மாநிலச் சமஸ்தானங்கள் பலவற்றில் ஆடிப் பெருமளவில் சன்மானம் பெற்றார்.
- கலாஷேத்திரத்தின் நிறுவுனர் ருக்மினி தேவியின் முதல் குரு இவராவார்.
- பாலசரஸ்வதி, சொக்கம்மாள், டி.வி.வெங்கடராமன் கௌரியம்மதளிடம் பயின்றவர்கள். இசைக்கலைஞர்களான அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், S.ராஜம் கௌரியம்மாளிடம் பதங்கள் கற்றவர்கள்.
- 1935ம் ஆண்டு இந்தியக் காங்கிரஸ் வெள்ளி விழா மாநாட்டையொட்டி நடந்த பொருட்காட்சியில் கடைசி நாட்டிய நிகழ்ச்சி நடாத்தினார்.
- தீய பழக்கங்களுக்கு அடிமையான இவருடைய மக்களால் சொத்துக்கள் விரயமாகின.
- தேவதாசி ஒழிப்பு மசோதா சட்டமாகி, கௌரியம்பாள் பரம்பரையாக வாழ்ந்து வந்த வீட்டை விட்டு வெளியேற்றியது.
- சிறு தாழ்வறையை வாடகைக்கு அமர்த்தி வறுமையின் எல்லைக்கோடு வரை சென்றார்.
- தியாகராய நகரில் சில சிறுமிகளுக்கு குறைந்த ஊதியத்தில் நடனம் கற்பித்தார்.
- மயிலாப்பூரில் இருந்து கால்நடையாக தியாகராஜ நகர் சென்று வந்த காட்சி பரிதாபத்திற்குியது.
- இவரிடம் பயின்றோர் அன்புடையோர் பொருள் உதவி செய்தாலும் அந்தக் கணமே அதைப் பறித்துப் போக அவருடைய மக்கள் காத்திருந்தனர்.
- அபிநயத்தில் இணையற்றவராக திகழ்ந்தார்.
- 21.01.1971 ம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- இறுதிச் சடங்கிற்கான செலவை ருக்மணிதேவி அம்மையார் ஏற்றுக்கொண்டார்.